# மயிலாடுதுறை நகராட்சி

**2019–ம் ஆண்டு ஜுன் மாதம் 19 –ஆம் தேதி புதன்கிழமை**
**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. பி.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,எம்.ஃபில்.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
மயிலாடுதுறை நகராட்சி

மயிலாடுதுறை
நாள்: **17.06.2019**

தனி அலுவலர் / ஆணையர்
மயிலாடுதுறை நகராட்சி

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **19.06.2019** | **1)** மயிலாடுதுறை நகராட்சியில் புதை பாதாள சாக்கடை திட்டம் பணிகள் நிறைவேற்றப்பட்டு **2008**-ம் ஆண்டு முதல் பொதுமக்களுக்கு இணைப்பு வழங்கப்பட்டு திட்டம் நடைப்பெற்று வருகிறது. பாதாள சாக்கடை கழிவுநீரை ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் இணைப்பு செய்யப்பட்டு சுத்திகரிப்பு செய்து நீர் வெளியேற்றப்படுகிறது. இத்திட்டமானது **WSP (Waste Stabilization Plant method)** முறையில் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள குட்டைகளில் **(Pond)** கழிவு வண்டல் மண்(கசடு) படிவம் அதிகளவு ஏற்பட்டு கழிவுநீர் தங்கும் நாட்கள் **(Retention Period)** மிக குறைவாக உள்ளதால் சரியான முறையில் சுத்திகரிப்பு செய்ய முடியாத சூழல் ஏற்பட்டு வருகிறது. மேலும் சுத்திகரிப்பு கழிவுநீர் வெளியேற்றப்படும் சத்தியவாணன் வாய்க்கால் அருகில் வசிக்கும் பொதுமக்கள் கழிவுநீரை வெளியேற்ற எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தேசிய பசுமை தீர்ப்பாயத்திற்கு தமிழ்நாடு சுற்றுசூழல் துறை மூலம் அனுப்பப்பட்டுள்ள குறிப்பில் சுத்திகரிப்பு நிலையத்தை தற்காலிகமாக சீர்செய்து புதுப்பிக்க வேண்டி கேட்டுக்கொள்ளப்பட்டது. எனவே சுத்திகரிப்பு நிலையத்தை தற்காலிகமாக சீர்செய்யும் பணிக்கு ரூ.**45.00** இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நிதியினை முழுமானியமாக வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 7724/99/இ2 | தீர்மான எண்.557 |

| | | |
|---|---|---|
| | 2) மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான கூறைநாடு தட்டாரத் தெருவில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்தினை திருமண மண்டபமாக பயன்படுத்திக்கொள்ளும் உரிமைக்கு திரு.ஆர்.சரவணன், சரண் என்விரோ சர்வீசஸ் பிரேவேட் லிட்., சென்னை என்ற நிறுவனத்திற்கு உரிய விதிகளுக்குட்பட்டு பொது ஏலம் விடப்பட்டு 01.01.2018 முதல் மாதம் ரூ.50,000/— வீதம் குத்தகைக்கு விடப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 11.01.2019ம் தேதிய திரு.ஆர்.சரவணன் குத்தகைதாரரின் மனுவில் மேற்படி திருமண மண்டபத்திற்கு போதிய குடிநீர் வசதி காம்போண்ட் முன்புறம் கேட் போன்ற அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாததால் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் ஏதும் ஒப்பந்தம் ஆகாததால் தனக்கு நிதியிழப்பு ஏற்படுள்ளதால் மேற்படி திருமண மண்டபத்தினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யபடுவதாக மேற்படி குத்தகைதாரர் மனுவில் தெரிவித்துள்ளார். அதனை தொடர்ந்து குத்தகைதாரர் செலுத்திய ஏல வைப்புத்தொகை மற்றும் வாடகை முன் தொகை ரூ.8,00,000/—ல் வாடகை தொகையினை ஈடு செய்துக்கொள்ளவும், திருமண மண்டபத்தினை நகராட்சி வசம் பெற்று பொது ஏலம் / பொது ஒப்பந்தப்புள்ள கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காக செய்திதாள் விளம்பர உத்தேச செலவு ரூ.20,000/— பெற நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.5050/2019/அ2 | தீர்மான எண்.558 |
| | 3) இந்நகராட்சி எல்லைக்குட்பபட்ட பகுதிகளில் பேரூந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேரூந்துகளுக்கு துறை மூலம் பஸ் கட்டணம் வசூல் செய்வதற்காக தேவையான ரசீது புத்தங்கள் அச்சிட்டு வசூர்ல செய்வதற்கு விலைப்புள்ளி 04.03.2019 அன்று கோரியதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.<br><br>வ.எண் \| விலைப்புள்ளிதாரர் பெயர் / முகவரி \| 100 ரசீது கொண்ட (ஒரு புத்தகத்தின் விலை விகிதம்)<br>1. \| கலைஞர் அச்சகம்,38/22, கச்சேரி ரோடு, மயிலாடுதுறை \| ரூ.38/—<br>2. \| என்.ராமகிருஷ்ணன்,ஜெமினி பிரஸ், ரயிலடி, மயிலாடுதுறை \| ரூ.40/—<br>3. \| நாதன் பிரஸ்,64, கச்சேரி ரோடு, மயிலாடுதுறை \| ரூ.30/—<br><br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள நாதன் அச்சகத்தின்விலைப்புள்ளியை ஏற்று உரிய ரசீது புத்தகம் அச்சிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு அவசர அவசியம் கருதி பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு உரிய ரசீது புத்தங்கள் அச்சிடுவதற்கு மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுதி பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரருக்கு உத்தரவு வாங்க அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 199/2019/அ2 | தீர்மான எண்.559 |

# மயிலாடுதுறை நகராட்சி

**2019–ம் ஆண்டு ஜுன் மாதம் 27 –ஆம் தேதி வியாழக்கிழமை**
**மாலை 3.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**
**முன்னிலை:– திரு. பி.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,எம்.ஃபில்.,**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

**மயிலாடுதுறை**
**நாள்: 24.06.2019**

**தனி அலுவலர் / ஆணையர்**
**மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **27.06.2019** | **1)** நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண். 48800/2006/எல், நாள்:20.06.2019ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.<br><br>நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1) நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (Tamil Nadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.560** |

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamil Nadu Municipal Accounts Service)கீழ் தேர்வுநிலை நகராட்சிகளுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி கணக்கு அலுவலர் | Municipal Accounts Officer | 1 |
| கணக்கர் | Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamil Nadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் / பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். அதன்படி இந்நகராட்சியில் உள்ள கீழ்காணும் பணியிடங்களை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class II கணக்கர் பணியிடம் ஒன்று மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடம் ஒன்று

<u>அலுவலக குறிப்பு</u> மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.2768/2019/சி1

---

**தீர்மான எண்.561**

2) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் இயங்கப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் உந்து நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களின் Panel board மற்றும் அதற்குண்டான மின் பாகங்கள் பழுதடைந்துள்ளது. இவைகள் பொருத்தப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மின்மோட்டார்களை நேரடியாக இயக்க வேண்டியுள்ளது. இதனால் மின்மோட்டார்கள் பழுதடைந்துவிடும் சூழ்நிலையாகிறது. எனவே கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் ஏற்று நிலையங்களில் உள்ள panel board-களை சரிசெய்திட தேவையான மதிப்பீடு தொகை ரூ.16,50,000/- (ரூபாய் பதினாறு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பாதாள சாக்கடை திட்ட நிதி 2019-2020 லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2206/2019/இ1

| | | |
|---|---|---|
| | 3) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் ஏற்று நிலையங்களில் உள்ள மின் மோட்டார்களை சீர்செய்து பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியின் ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் இப்பணியினை மேற்கொள்ளாத காரணத்தினால், அப்பணியின் அவசர அவசியம் கருதி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தினை ரத்து செய்து உடன் மறுஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.518/2019/இ1 | தீர்மான எண்.562 |
| | 4) மயிலாடுதுறை நகராட்சி சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015-16ன் கீழ் ரூ.210.00 மதிப்பீட்டில் உயிரிய செயலாக்கம் முறையில் உரக்கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை அகற்றி இடத்தினை மீளப்பெறப்படும் பணி நடைப்பெற்று வருகிறது. மேற்படி பணிக்கு குப்பைகளை அளவீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி Anna University, சென்னை-ஐ Project Management Consultant ஆக அமைத்து கொள்ள ஆகும் consultant fees ரூ.4,95,600/- (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்தி ஆறுநூறு மட்டும்). இதனை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 4421/2015/இ1 | தீர்மான எண்.563 |
| | 5) மயிலாடுதுறை நகராட்சி முடிகண்டநல்லூர் தலைமை குடிநீரேற்று நிலையத்தில் இயங்கி கொண்டிருந்த 1 எண்ணிக்கை 125 H.P மின்மோட்டாரின் Shaft மற்றும் coupler உடைந்து நீர் இரைக்க இயலாமல் உள்ளது. மேலும் நீரின் அளவு குறைந்து உள்ளதால் 1 எண்ணிக்கை 250 mm அளவுள்ள பைப் ஒன்று புதிதாக பொருத்தி 11 ½ மீட்டர் உள்ளதை 15 மீட்டராக மாற்றிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,30,000/- (ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்). இப்பணியானது அத்தியாவசியமான குடிநீர் வழங்கும் பணியாக இருப்பதால் இப்பணியினை நகராட்சி சட்ட விதி எண்.15ன் கீழ் நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி 2019-2020லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேலும் இப்பணி செய்ததற்கான பட்டியல் தொகை வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.<br><br>ந.க.எண். 2380/2019/இ1 | தீர்மான எண்.564 |

**6)** மயிலாடுதுறை நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018-19ன்கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 20.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்.565**

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018-19 | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி, 24வது வார்டு சத்திய சாய் நகர் சாலையை தார் சாலையாக அமைத்தல். | 15,00,000/- | திரு. A. சட்டையப்பன், மயிலாடுதுறை. | ரூ.1285167.60 (-) 0.053% குறைவு | திரு. A. சட்டையப்பன், மயிலாடுதுறை. |
| | | | திரு. S. காளிதாசன், மயிலாடுதுறை. | ரூ.1291107.00 (+) 0.41% அதிகம் | |

<u>அலுவலககுறிப்பு</u> **1.** பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 000891/2019/இ1

**7)** இந்நகராட்சியில் தபால் பிரிவில் உள்ளூர் மற்றும் வெளியூர் தபால்களை தபால்துறை மூலம் அனுப்ப வேண்டியதன் அவசியத்தை கருதியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், தஞ்சாவூர் மற்றும் இதர அரசுத்துறைகளுக்கு அவசர அவசியம் கருதி அறிக்கைகள் அனுப்ப வேண்டியுள்ளது. எனவே 2019–2020–ம் ஆண்டிற்கு அஞ்சல் வில்லைகள் வாங்க வேண்டியுள்ளதால், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.566**

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதி செலவினத்தில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.3222/2018/டி1.

| | | |
|---|---|---|
| | **8)** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை கடித எண்.**2342/2012/இ2** நாள்:**21.06.2019**ல் மயிலாடுதுறை நகராட்சியில் மின்சாரம் சேமிப்பது மற்றும் பராமரிப்பு பணிகளை தனியார் மேற்கொள்ள ஏதுவாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் ஒப்பந்தம் கோரப்பட்டு M/S KCP நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ESCO நிறுவனம் AG Audit நடவடிக்கைகளை **3**-ம் நபர் சரிப்பார்த்தல் (3rd Party Verification) நிகழ்வுக்கு M/S TUV-SUD Ltd., சென்னை அவர்களை ஆலோசகராக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டதன்படி, மயிலாடுதுறை நகராட்சியில் **3**-ம் நபர் சரிப்பார்த்தல் பணி (3rd Party Verification) முடிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அப்பணிக்கு வழங்க வேண்டிய பட்டியல் தொகையை தெருவிளக்கு பராமரிப்புக்காக பொருத்தப்பட்டுள்ள **208** மின்சார ஓட்டத்தை நிறுத்தும் கருவி (Switch)களை கணக்கிட்டு **3**ம் நபர் சரிப்பார்த்தல் நிறுவனமான M/S TUV-SUD Ltd., சென்னை நிறுவனத்திற்கு ரூ.**1,35,350/-**ஐ வழங்கிட ஏதுவாக இந்நகராட்சி பொது நிதியிலிருந்து ECS முறையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வங்கி கணக்கு எண்.**32986950180** வரவு வைத்திட அறிவுறுத்தப்பட்டதின் பேரில் மேற்படி செலவீனத் தொகை ரூ.**1,35,350/-**ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். **3505/2012/இ1** | **தீர்மான எண்.567** |
| | **9)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.**9**, பழைய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் கட்டண கழிவறை மிகவும் பழுதடைந்து உள்ளது. இதனால் அக்கழிவறையினை பயன்படுத்தி வரும் பொதுமக்களுக்கு சிரமநிலை ஏற்பட்டுள்ளது. எனவே அதனை சீர்செய்திட தேவையான மதிப்பீடு தொகை ரூ.700000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பொது நிதி **2018–2019**–லிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.2747/2019/இ1. | **தீர்மான எண்.568** |
| | **10)** இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016 நடைமுறையில் உள்ளது. தற்போது மத்திய சுற்றுப்புற காடுகள் துறையில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் சம்பந்தமாக விதிமுறைகள் செயல்படுத்தியதாக சம்மந்தமாக கடமைகளை பற்றிய மயிலாடுதுறை நகராட்சியில் செயல்படுத்தும் வீதம் சம்மந்தாக Chapter-களை மாவட்ட அரசிதழில் வெளியிடுமாறு தெரிவிக்கப்பட்டதற்கிணங்க நாகப்பட்டினம் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீட்டில் வெளியிடுவதற்கும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.10000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு: அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண்.934/2014/எச்1 | **தீர்மான எண்.569** |

| | | |
|---|---|---|
| | **11)** இந்நகராட்சி பொது சுகாதாரம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306 (28A) மற்றும் 2019– ஆம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன்கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல் எடுத்து செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன நகராட்சியில் தடை செய்யப்பட்டு அதற்கென தண்டனைகள் மற்றும் அபராதத் தொகை வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கென செயலாக்க மேல்முறையீட்டு அதிகாரி ஆணையரே என்ற அறிவிப்பு வெளியிடவும், மாவட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடவும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.10000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.8028/2016/எச்1 | **தீர்மான எண்.570** |